கோவை சிந்தாமணி சிறப்பங்காடியில் அரிசி விற்பனை.

*4099. திரு. கே. ரமணி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை சிந்தாமணி சிறப்பங்காடியில் திருக்கோவிலூரில் இருந்து தரக்குறைவான அரிசி அதிக விலைக்கு செயலாளரின் உத்தரவின்பேரில் வாங்கப்பட்டு ஒரு கிலோ ரூ. 8.40க்கு விற்கப்பட்டதால் பொதுமக்கள் வாங்க மறுத்ததால், வியாபாரம் வீழ்ச்சி அடைந்துள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

(இ) எவ்வளவு நட்டம் ஏற்பட்டது ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கொள்முதல் செய்யப்பட்ட வெள்ளைப் பொன்னி மற்றும் புழுங்கலரிசி அனைத்தும் விற்பனை செய்யப்பட்டு விட்டதாலும் நட்டமேதும் ஏற்படாததாலும் நடவடிக்கை எடுக்கும் கேள்விக்கு இடமில்லை.

9-35 மணி

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே என் கேள்வியிலே குறிப்பிடப்பட்டிருக்கும்படியான திருக்கோவிலூரில் இருந்து மிக அதிகப்படியான விலை கொடுத்து தரக்குறைவான அரிசி வாங்கப்பட்டு அதன் காரணமாக ஜனங்கள் அந்த அரிசியை வாங்க மறுத்து வியாபாரத்தில் கூட அங்கே தகராறு ஏற்பட்டு அதில் தொழிலாளர் பக்கத்திலிருந்து 'ரிப்போர்ட்' கூட செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த விவரங்கள் அமைச்சர் அவர்களுக்குக் கிடைக்கவில்லையா? இந்தப் பொருள் வாங்குவதற்கு என்ன ஏற்பாடு அந்த சிந்தாமணி அங்காடியில் செய்யப்பட்டிருக்கிறது? செகரட்டிரியே பார்த்து வாங்குவதற்கு இறுதி உத்திரவு கொடுத்துவிடலாமா? அல்லது கூட்டுறவு முறையான ஏதாவது குழுவோ அல்லது அதில் ஊழல் நடக்காமல் பார்த்துக் கொள்வதற்கு வேண்டிய ஏதாவது அமைப்புகளோ அந்த 'பர்ச்சேசிங்' நடத்துவதற்கான ஏற்பாடுகள் உள்ளதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியின் அடிப்படையில் சில விளக்கங்களை தெரிவிக்க விரும்புகிறேன். கோயம்புத்தூர் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி, கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை அங்காடியின் ஒரு அலகு ஆகும். இப்பண்டகசாலையுடன் இணைக்கப்பட்டுள்ள பிரதம பண்டகசாலையிலும், பண்டகசாலையின் கிளைகளிலும் அனுப்பக் கோரிய ஐ. ஆர். 50 மற்றும் வெள்ளைப் பொன்னி புழுங்கல் அரிசி பண்டகசாலையில் போதிய இருப்பு இல்லாததால், பண்டகசாலையின் செயலாளரால் திருக்கோவிலூர் அரிசி வியாபாரி ராஜராஜேஸ்வரி மாடர்ன் ரைஸ் மில்லுக்கு இவ்வகை அரிசிகளை அனுப்பக்கோரி 25—11—1988 அன்று தந்தி அனுப்பப்பட்டது. பின்பு செயலாளர் இவ்வாறு அரிசி கொள்முதலுக்கு ஆணை பிறப்பித்ததை தனி அலுவலர் 28—11—1988 அன்று பின்னேற்புச் செய்துள்ளார். ராஜராஜேஸ்வரி மாடர்ன் அரிசி ஆலையிடமிருந்து வெள்ளைப் பொன்னி புழுங்கல் அரிசி 6—12—1988 அன்று 75 கிலோ மூட்டை ஒன்று ரூ. 590 வீதம் 133 மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டன. இவ்வகை அரிசி வெளி அங்காடியில் மூட்டை ஒன்றுக்கு ரூ. 620 வீதம் விற்பனை செய்யப்பட்டு வந்தது. எனினும் அவ்வரிசி பண்டகசாலையில் மொத்த விலை மூட்டை ஒன்றுக்கு ரூ. 621.60 வீதமும், கிளைகளில் சில்லரை விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ. 8.40 வீதமும் விற்பனை செய்யப்பட்டது. பண்டகசாலையின் பரிசோதனைக் கூடத்தில் இந்த அரிசி சோதனை செய்யப்பட்டு பின்னால் விற்பனை செய்யப்பட்டது. இதனால் பண்டகசாலையில் விற்பனை வீழ்ச்சி ஏதும் ஏற்படவில்லை. மேலும் கொள்முதல் செய்யப்பட்ட வெள்ளைப் பொன்னி அரிசி அனைத்தும் பண்டகசாலையில் விற்பனை செய்யப்பட்டுவிட்டது என்பதுடன் இருப்பு ஏதும் இல்லை. இவ்வரிசி விற்பனையில் நட்டம் ஏதும் ஏற்படவில்லை என்கின்ற குறிப்பு எனக்குத் தரப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ள சூழ்நிலையில் அவைகள் எல்லாம் மாற்றி அமைக்கப்பட்டு புதிய கொள்முதல் கொள்கை ஏற்கேனவே மானியத்திலே நான் பேசுகிறபோது அறிவித்திருக்கிறேன் புதிய கொள்முதல் கொள்கை ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் அங்கேயுள்ள மையத்தின் மூலமாக பரிசீலனை செய்து டெண்டர் மூலமாக பேச்சுவார்த்தை செய்து அரிசி வாங்கப்படுகிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(9-40 மணி)

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வியில் அநேக விவரங்கள் என்னனென்ன கேட்டிருந்தேனோ, அந்த விவரங்கள் பலவற்றையும் உண்மை தான் என்று அமைச்சர்

அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நஷ்டம் ஏற்பட வில்லை. அங்கே கொள்முதல் செய்யக்கூடிய அரிசி மட்டுமல்ல, பருப்பு இது போன்ற பல பொருள்கள் கொஞ்சம் சப்-ஸ்டாண் டர்டாக கொள்முதல் செய்யப்பெற்று, அங்கே நானே கோடவுனுக்குப் போய் நூறு மூட்டை பருப்பை பார்த்தேன், அந்த பருப்பினுடைய தரமே குறைந்து போய் மக்கள் வாங்க மறுத்துக் கொண்டிருந்த சமயம் அது. அதை கம்மி விலைக்குப் பின்னாலே விற்று இருப்பார்கள். பர்ச்சேஸ் பண்ணுவதிலே இப்படிப்பட்ட தனி மனிதனுடைய ஆதிக்கமும் ஊழலும் பாதிக்காமல் இருப் பதற்கு பாதுகாப்பு என்ன செய்யப்படும் என்பது என்னுடைய கேள்வி. அதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த பாதுகாப்பை ஜனங்களை உத்தேசித்து செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, இப்பொது அறிவிக்கப்பட்டுள்ள கொள்முதல் கொள்கைப்படி உள்ளூரிலே விளைகின்ற விளைபொருள்கள் அங்கேயுள்ள வட்டார அளவிலே உள்ள குழுக்கள் மூலமாகப் பரிசீலிக்கப்பட்டு அந்தப் பொருள்கள் பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டு வாங்கப்பட வேண்டும் என்று பணிக்கப்பட்டிருக்கிறது. வெளிமாநிலங்களிலிருந்து பருப்பு, சீரகம், வெந்தயம், அரிசி ஆகிய பொருள்கள் வாங்கப்படுகின்றபோது இங்கிருந்து கன்சூமர் ஃபெடரேஷன் மூலமாக டெண்டர் மூலமாக இவைகள் எல்லாம் ஒழுங்குபடுத்தப்பட்டு வெளி மாநிலங்களிலிருந்து இந்தப் பொருள் கள் வாங்கப்படுகிறது என்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். எனவே பொது மக்கள் அச்சப்படுவதற்கான எதுவும் நிச்சயமாக நடக்காத அளவிற்கு ஒவ்வொரு மட்டத்திலும் இந்த கொள்முதல் கொள்கை வரையறுக்கப்பட்டு குழுக்கள் மூலமாக டெண்டர்கள் மூலமாக இவைகள் வாங்கப்படுவதால் எந்த விதமான பாதிப்பும் பொது மக்களுக்கு ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி எஸ்.பி. சற்குணம் : தலைவர் அவர்களே, சென்னை நகருக்கு ஒரு மாதத்திற்கு சமையல் எண்ணெய் எவ்வளவு வழங்கப் படுகிறது.......... (மணியடிக்கப்பெற்றது).

சான்றளிக்கப்பட்ட வித்துக்கள் விநியோகம்.

*9023. **திரு. செ. நூர்முகமது**

திரு. ஆர். நடேசன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும்பான்மை விவசாய நிலங்கள், சிறு அளவு உடையவையாக இருப்பதால், சான்றளிக்கப்பட்ட வித்துகள் 5 கிலோ, 10 கிலோ பாக்கெட்டு களில் விநியோகிக்கப்படவேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதை ஏற்க உத்தரவிடுமா ?